செ.வெ.எண்: 252 நாள்: 11.04.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் காவல்துறையினருக்கு தேர்தல் ஆணையத்தின் இணையத்தளம் வாயிலாக ஒதுக்கீடு செய்யும் பணி நடைபெற்றது.**

---

பாராளுமன்ற தேர்தலையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் காவல்துறையினருக்கு தேர்தல் ஆணையத்தின் இணையத்தளம் வாயிலாக ஒதுக்கீடு செய்யும் பணி தேர்தல் காவல்துறை பார்வையாளர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் முன்னிலையில் இன்று (11.04.2019) மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற பொது தேர்தல் தமிழகத்தில் 18.04.2019 அன்று நடைபெறவுள்ளதையொட்டி தேவையான அனைத்து முன்னேற்பாட்டு பணிகளும் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,537 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளது. தேர்தலை அமைதியாக நடத்திடும் வகையில் தேர்தல் பாதுகாப்பு பணியில் காவல்துறையை சேர்ந்த 2,641 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் வரும் நாட்களில் மாவட்டத்தில் பணியாற்ற வேண்டிய இடங்களை தேர்தல் ஆணையத்தின் இணையத்தளம் வாயிலாக ஒதுக்கீடு செய்யும் பணி திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் பாராளுமன்ற தொகுதிக்கான காவல்துறை பார்வையாளர் திரு.பர்ஹத் அப்பாஸ்.இ.கா.ப., மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ச.செல்வராஜ், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஆறுமுகம், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.திருமலை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**